# தினமலர்

நிறுவனர் : டி.வி. ராமசுப்பையர்
ஆசிரியர் : கி. ராமசுப்பு

Website: www.dinar

சென்னை, வேலூர், புதுச்சேரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் ■ சிறுவர் மலர் இதழுடன்

தினமலர்
சென்னை | வெள்ளி | 1.6.2018


## மாநில பால் பேட்மின்டன் செயின்ட் ஜோசப் சாம்பியன்



■ மாநில ஓபன் பால் பேட்மின்டன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற, செயின்ட் ஜோசப் அணியினர். இடம்: செம்ஞ்சேரி.

**சென்னை, ஜூன் 1–** மாநில ஓபன் பால் பேட்மின்டன் போட்டியில், செயின்ட் ஜோசப் கல்லூரி, சாம்பியன் பட்டம் வென்றது.

திருச்சி, ஸ்ரீரங்கம் பகுதியில் உள்ள, ஓல்டு பாய்ஸ் பேட்மின்டன் கிளப் சார்பில், இரண்டாவது மாநில ஓபன் பால் பேட்மின்டன் போட்டிகள், சமீபத்தில் நடந்தன.

சென்னை, கோவை, திருப்பூர், காஞ்சிபுரம், நாமக்கல் உட்பட, பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த, கல்லூரிகள் மற்றும் கிளப் என, 24 அணிகள், போட்டியில் பங்கேற்றன.

முதலில், 'நாக் அவுட்' முறையில், நான்கு அணிகள் தேர்வு செய்யப்பட்டு, 'லீக்' சுற்றுகளாக போட்டிகள் நடந்து முடிந்தன.

இறுதியில், புள்ளிகள் அடிப்படையில், சென்னை செமஞ்சேரியைச் சேர்ந்த, செயின்ட் ஜோசப் கல்லூரி அணி வெற்றி பெற்று, சாம்பியன் பட்டம் வென்றது.

வெற்றி பெற்ற அணி மாணவர்களுக்கு, செயின்ட் ஜோசப் கல்லூரி நிர்வாக இயக்குனர் பி.பாபு மனோகரன், பாராட்டு தெரிவித்தார்.

all 01/06/18